தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, ஏப்ரல் 25, செவ்வாய்க்கிழமை.

சித்திரை 12, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்''.

ஒப்புரவு அறிந்து போற்றிப் பிறர்க்கு உதவியாக வாழ்கின்றவன் உயிர் வாழ்கின்றவன் ஆவான்; மற்றவன் செத்தவர் வரிசையில் சேர்த்து வைத்து எண்ணப்படுவான்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கொட்டாரம் சார்நிலைப்பதிவாளர் அலுவலகம்.

121—*வினா எண் 449)— திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், கொட்டாரம் என்ற ஊரில் சார்நிலைப் பதிவாளர் அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இது குறித்து அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொட்டாரம் என்ற ஊரில் நீண்ட நாட்களாக சார் நிலை பதிவாளர் அலுவலகம் கட்ட வேண்டுமென்ற குறிப்பு இருந்தது. அதைத் தொடர்ந்து அதற்கு இடம் வாங்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 569 பதிவகங்கள் உள்ளன. அவைகளில் 294 பதிவகங்கள் அரசு கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. ஏனையவை தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அரசு கட்டிடங்களில் செயல்பட்டு வரும சார் பதிவாளர் கட்டிடங்கள் பல மிகவும் பாழடைந்து இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளதால், அவ்வப்போது ஏற்படும் உடனடித் தேவையின் அடிப்படையில், அரசின் நிதி நிலையையும் கருத்தில் கொண்டு புதிய கட்டிடங்கள் கட்டும்பணி மேற்கொள்ளப்படும். இதன் அடிப்படையில் கொட்டாரத்திலும் புதிய சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவது குறித்து பதிவுத்துறை அலுவலரிடம் இருந்து கருத்து பெற்று முடிவு எடுக்கப்படும்.

கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்தல்

122—*வினா எண் 885)—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 8 வட்டங்களில் 6 வட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக வறட்சி நிவாரண ஆணையர் தெரிவித்துள்ளார். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை அறிவிப்பு செய்யாமலேயே அங்கு அனைத்து நிவாரணப்பணிகளும மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தலைவரவர்களே, அந்த 6 வட்டங்கள் எது எது என அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்..... மேலும் விவசாயிகள் அந்தப் பகுதியிலே மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள், இரண்டுதடவை எழுந்துவிட்டார்கள்; அவர்களை மேலும் சிரமப்படுத்துகிறீர்கள்.